

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 129–வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை காமராசர் சாலையில் நேற்று (23.01.2025) அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, ஐட்ரீம் ஆர். மூர்த்தி, ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் (செய்தி) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எஸ்.பாலாஜி தலைமை! சென்னை கிழக்கு மாவட்ட

# மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## செந்தலை கவுதமன் - செங்கை தாமஸ் உரையாற்றுகின்றனர்!

சென்னை, ஜன. 24

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப் போர் தியாகிகளுக்கு வீரவ ணக்க நாள் பொதுக்கூட் டம் நாளை (25.1.2025 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு, வேலாயுதம் தெரு, புதுப்பேட்டை மார்க்கெட் அருகில் நடை பெறுகிறது.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பா ளர் எஸ்.பாலாஜி தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செய லாளர், அமைச்சர் பி. கே.சேகர்பாபு,

பகுதிக் கழகச் செயலா ளர்கள் வி.சுதாகர், சொ. வேலு எம்.சி. மற்றும் கே ா . ஏ க ப் ப ன் , பா.ஸ்ரீராமுலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், வான வில் விஜய், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, அ.நிர்மலா தேவி, பரிதி இளம்சுருதி எம்.சி, எல்.சுந்தர்ராஜன், பாஃத்திமா முசாஃபர் எம். சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கு.வேணுகோபால், எஸ். மதனரூபன், எஸ்.எஸ்.மணி கண்டன், அசோக் ஆண்ட் ரூஸ், ம.ஜெயலட்சுமி, ஜோஸ்வா லிவிங்ஸ்டன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தலை மைக் கழகப் பேச்சாளர்கள் செந்தலை கவுதமன், செங்கை தாமஸ் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இ க் கூ ட் ட த் தி ல் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், மத் திய சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பி னர்கள் ப.தாயகம் கவி, இ . ப ர ந் த ா ம ன் , அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், எழும்பூர் தொகுதி தேர்தல் பார்வை யாளர் பி.எம்.யாழினி,

ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், எஸ்.மணி முடி, சங்கரி நாராயணன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எம்.விஜய குமார், தமிழன் பிரசன்னா, வே.உமாகாந்த், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, கவிஞர் நன்மாறன், எல்.பி.எப்.வர தன், தேவஜவகர், ஜி.மகா தேவன், புனிதவதி எத்திரா சன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ஜி.சாந்தகுமார் எம்.சி, ஐ. சி . எ ப் . வ . மு ர ளி த ர ன் , எ.நாகராசன் எம்.சி, டி.எஸ். பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வே. வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.இரா ஜசேகர், எஸ்.முரளி மற்றும் பொதுக்குழு உறுப்பினர் கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட மாமன்ற உறுப்பி னர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொ ண் டு சிறப்பிக்கின்றனர்.

61 (அ) வட்டக் கழகச் செயலாளர் இ.மொய்தீன் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் தொகுதியில் உள்ள கிராம ஊராட்சி பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை விரைந்து நிறைவேற்றும் நோக்கத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனான கலந்தாய்வு கூட்டம் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. கடம்பத்தூர், திருவாலங்காடு, பூண்டி ஊராட்சி ஒன்றியங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மாவட்ட அவைத்தலைவர் க.திராவிடபக்தன், கழக ஒன்றிய செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், கூளூர் எம்.இராஜேந்திரன், கே. அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், ஆர். ஜெயசீலன் , மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தா. மோதிலால், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, பொன். பாண்டியன், ஆ. கமலகண்ணன், காஞ்சிபாடி பி. சரவணன், பட்டரை கே. பாஸ்கரன், கொப்பூர் டி. திலீப்குமார், ஆர். வாசு, உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5–இல், நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 5 | காங்கேயம் | கோகுல் திருமண மண்டபம், தாராபுரம். |
| | | | தாராபுரம் | |
| | மாலை 3.00 மணி | | மடத்துக்குளம் | ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை. |
| | | | உடுமலைப்பேட்டை | |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 22-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (23.1.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை பேருந்து நிலையத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து. பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர், மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யூ. கணேசன், மாமன்ற உறுப்பினர் குமாரி நாகராஜ், தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மொழிப்போர்த் தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி!

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணியினர் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஜன. 24

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அ மை ப் ப ா ள ர் , விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகர ராஜா விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன் னிட்டு நாளை (25.1.2025 சனிக்கிழமை) காலை 8.30 மணியளவில், சென்னை, விருகம்பாக்கத்தில் உள்ள தாய்மொழியாம் தமிழ் மொழி காத்த தியாக தீப மான மொழிப்போர்த் தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச் சர் மா.சுப்பிரமணியன் மற் றும் கழக முன்னணியினர் மலர்வளையம் வைத்து வீர வணக்கம் செலுத்துகின்ற னர்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் தலைமை கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப் பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கள், அனைத்து நிலை செயல் வீரர்கள், இளைஞர் அணி மகளிர் அணி நிர்வா கிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப் போர்த் தியாகிக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளை ஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகர ராஜா தனது அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

### தமிழ்நாட்டின்

# மக்களோடு மக்களாகும் மாமுதல்வர்! எக்காலும் ஆள்வார்!



வியத்தொறும் வியத்தொறும் வியப்பே! வியப்பே!
நயத்தகும் பாசம்! நறுந்தேன் அன்புக்
குடத்தேன் மொய்க்கும் தேனீக் கள்போல்
நடந்தே வீதி நாயகர் செல்கையில்
பேணும் மக்களோ பெரிதும் நெகிழ்ந்து
மாணும் மகிழ்ச்சி கரைபுரண் டோடிடக்
காணும் காட்சியோ கண்கொளாக் காட்சி!
நாணும்! கைமாறு கருதா மேகமும்!
நினைத்தவர் நினைத்ததைக் கேட்டவர் கேட்டதைத்
தனையே ஈகம் தமிழ்நாடு வாழ
**செய்மா முதல்வர் இஸ்டாலின் எம்கோ**
**மெய்செயற் கோபோல்** மேதினி உண்டோ?
மக்களொடு மக்களாய் மாமுதல்வர்!
**எக்காலும் ஆள்வார்** என்பதும் உறுதியே!



பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**
உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்.

### குடியரசு நாள்:

# ஜன. 24, 26 தேதிகளில் சிறப்பு ரயில்கள்!



சென்னை,ஜன.24-

குடியரசு நாளை யொட்டி ஜன. 24,26 தேதிகளில் சிறப்பு ரயில் கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித் துள்ளது.

குடியரசு நாளை யொட்டி ஜன. 24 மற்றும் 26 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில்கள் இயக்கப் படும் என தெற்கு ரயில்வே அறிவித் துள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து இன்று (ஜன. 24) இரவு 10.40 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் நள்ளிரவு 12 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும்.

ம று ம ா ர் க் க ம ா க ஜன.26 ஆம் தேதி கன்னி யாகுமரியில் இருந்து இரவு 8.30 மணிக்கு புறப் படும் சிறப்பு ரயில் மறு நாள் காலை 8.30 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

சென்ட்ரலில் இருந்து இன்று (ஜன. 24) இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் மாலை 6.05 மணிக்கு திரு வனந்தபுரம் செல்லும்.

ம று ம ா ர் க் க ம ா க ஜன.26 ஆம் தேதி திருவ னந்தபுரத்தில் இருந்து இரவு 8.20 மணிக்கு புறப் படும் சிறப்பு ரயில் மறு நாள் பகல் 2 மணிக்கு சென்ட்ரல் வந்தடையும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு தெற்கு மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக சார்பாக கழக செயல்வீர்கள் கூட்டம் மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு வருகிற 25.1.2025 மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலிருந்து 3000க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டு கூட்டத்தை மிகப் பிரம்மாண்டமான அளவில் சிறப்பிக்க வேண்டும் என கேட்டு சிறப்புரை ஆற்றினார். அப்பொழுது மண்டல தலைவரும் பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் இ. எஸ். பெர்னாட், ஏ .கே. கருணாகரன், தொகுதி ஒருங்கிணைப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், அ.தமிழ்மாறன், மூ. ரஞ்சன், பகுதிக் கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 130 வது வட்டத்தில் உள்ள லட்சுமிபுரம், கங்கை அம்மன் கோவில் தெரு, ஆகிய பகுதிகளில் குடிநீர் வரவில்லை எனப் புகார்கள் வந்தது. அதனைத் தொடர்ந்து தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி நேரில் சென்று குடிநீர் வழங்கவும், அப்பகுதி மக்களின் சில கோரிக்கைகளை கேட்டறிந்து தீர்த்து வைத்தார். இந்தநிகழ்வில் தியாகராயர்நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, 130 வது மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கர், 130 வது வட்டக் கழகச் செயலாளர் டி.கமல் ஆகியோர் உடனிருந்தனர்.